# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**<u>ஆணை நாள் 03.08.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 14689/SCIC/2024</u>**

திரு.B. சுரேந்தர் - மேல்முறையீட்டாளர்
பிளாட் எண்.3007-B, கதவு எண்.4/668
இராம் நகர் தெற்கு
5வது பிரதான சாலை, மடிப்பாக்கம்
சென்னை - 600 091.
Phone:9841452115

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
அரசு சார்புச் செயலாளர்
மனிதவள மேலாண்மைத் துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **05.09.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 25.10.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 08.11.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 05/09/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ Human Resources Management Department, Secretariat, Chennai-9 அவர்களுக்கு இணையதளம் வாயிலாக அனுப்பி, அதில் "Request PIO to provide 3 letters namely (1) Ref No.2 Controller of Examinations Madurai Kamaraj University letter No.E/Recog-2/85 dated 30/11/1985" என்பன போன்று 6 (ஆறு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.B.சுரேந்தர் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.ஹரிஹரன்,

அரசு சார்புச் செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் ஆஜராகி, மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 05/09/2024 நாளிட்ட மனுவை இணையதளம் வாயிலாக அனுப்பியுள்ளதற்கு, பொதுத் தகவல் அலுவலர் 24/09/2024 தேதியிட்டு இணையதளம் வாயிலாகவே பதில் அனுப்பியுள்ளதோடு, அம்மனுவில் கோரிய இனங்கள் 1 மற்றும் 2-க்கு, பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து பொதுத் தகவல் அலுவலர்/ உயர்கல்வித் துறைக்கும், இனம் 3(ii)-க்கு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்திற்கும், மற்றும் இனங்கள் 3(i), 4 & 5-க்கு மனுதாரர் கோரிய தகவல் பராமரிப்பில் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளதோடு, இனம் 6-க்கு பதிலும் அனுப்பியுள்ளதாக விவரித்தார். மேலும் தெரிவிக்கையில், பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் அவர்கள் 23/07/2025 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரரும் மேற்சொன்ன 23/07/2025 தேதியிட்ட தகவல் தனக்கு கிடைக்கப் பெற்றதை ஒப்புக் கொண்டார். மேலும் மனுதாரர் இனங்கள் 1, 2-க்கான தகவல் / நகல் பொதுத் தகவல் அலுவலர்/ உயர்கல்வித்துறையிடமிருந்து இதுநாள் வரை எவ்வித தகவலும் கிடைக்கப் பெறவில்லை என்றும் இனங்கள்-3(i)-ல் கோரிய அரசு கடிதத்தின் நகல் எண்.36308/M/2010-1 P&A.R Dept, 08/10/2010, இனம்-4-ல் கோரிய அரசு கடிதத்தின் நகல் எண்.35701/CS (Agri) A1/2016 from the Deputy Secretary (Agri) Chief Secretariat, Govt. of Pudhucherry dated 02-11-2026 & 27-01-2027 & இனம் 4(ii)-ல் கோரிய Govt letter No.39075/M2/2016-1, P & AR(M) Dept., dt 30/11/2016 நகல்கள் தனக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கோரினார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர், மனிதவள மேலாண்மைத்துறை அவர்கள் ஏற்கனவே 24/09/2024 தேதியிட்ட இணையதள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரர் கோரிய நகல்கள் பராமரிப்பில் இல்லை எனத் தெரிவித்தார். **பொதுத் தகவல் அலுவலர், மனிதவள மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் மீண்டும் தீவிரமாகத் தேடிக் கண்டுபிடித்து, முறையாக சரிபார்த்து, அதனை கண்டுபிடித்தவுடன் அதன் நகலினை இனங்கள் 3(i), 4(i) & 4(ii)-க்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு மேற்சொன்னவாறு கிடைக்கப் பெறவில்லையெனில் அது குறித்த பதிலினை மனுதாரருக்கு 31/08/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், உயர்கல்வித் துறை அவர்கள் இனங்கள் 1 மற்றும் 2-க்கான பதில் / தகவலினை 31/08/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.உத்தண்டி, அரசு சார்புச் செயலாளர் (பல்கலைக் கழகம்), உயர்கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்கள், இது நாள் வரை மனுதாரருக்கு எவ்வித பதிலும் அளிக்காமைக்காக அன்னார் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை 31/08/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 14689/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்
மனிதவள மேலாண்மைத் துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

திரு.உத்தண்டி
பொதுத் தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்
உயர்கல்வித் துறை (பல்கலைக் கழகம்)
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.B. சுரேந்தர்
பிளாட் எண்.3007-B, கதவு எண்.4/668
இராம் நகர் தெற்கு
5வது பிரதான சாலை, மடிப்பாக்கம்
சென்னை - 600 091.
Phone:9841452115

RG/Sr.PC